Sunday Thinakkural 02nd October 2011

# கொழும்பில் புதிய மாற்றத்தை எம்மால் மட்டுமே ஏற்படுத்த முடியும்



இந்த வாரம் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலிலே கொழும்பிலே நிலவும் கடும் போட்டி தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பாக மேயர் வேட்பாளராக போட்டியிடும் மிலிந்த மொரகொட தினக்குரலுக்கு தெரிவித்த கருத்துகள் வருமாறு;

கேள்வி:– கொழும்பு மாநகர சபைத் தேர்தலுக்கான போட்டியும் பிரசார நடவடிக்கைகளும் கடைசி வாரத்தை அண்மித்துள்ளது. இது தொடர்பாக தங்களது வெற்றி தொடர்பாக என்ன கருதுகிறீர்கள்?

பதில்:– நான் பொது மிகை மதிப்பீடு அடிப்படையில் கதைப்பவன் அல்ல. மிகவும் அதிகளவிலான வெற்றியை எய்தக்கூடிய வாய்ப்பு எமக்குள்ளது.

கடந்தகால கொழும்பு மாநகர சபையின் நிலைவரங்களை மக்கள் எம்மிடம் கருத்து ரீதியாக பகிர்ந்து கொண்டனர். மிக்க வெறுப்புணர்வுடன் இருக்கும் கொழும்பு மாநகர மக்களுக்கு நாம் உண்மையை வெளியிட்டோம். எங்களது குழுவினரால் நன்மைகள் விளையும் என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் இருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

கேள்வி:– கொழும்பிலே வாழும் பெரும்பான்மையான மக்கள் ஏழ்மையிலே வாடும் மக்கள். அவர்களுக்கு கூட்டமைப்பின் தகவல்கள் சரியாக சென்றடைகின்றனவா? அவர்கள் அவற்றை நம்புகிறார்களா?

பதில்:– மக்கள் ஏழைகளாக இருப்பினும் புத்திக்கூர்மை உடையவர்கள். மிகப் பாரிய அபிவிருத்தி திட்டங்களை பற்றி மக்கள் பேசுகின்றனர். நாங்களும் எமது சிறியளவிலான திட்டங்கள் தொடர்பாக அவர்களிடத்து கூறினோம்.

கூட்டமைப்புக்கு அதிகார பலம் இருந்தாலும் கூட நாங்கள் எப்போதும் கூறுவது எங்களால் செய்ய முடிந்தவற்றை மட்டுமே. நிம்மதியாக சாப்பிட்டு உறங்கி வீட்டில் வாழ்ந்து கையில் பணம் தவழ்கிற நேரம் பிள்ளைகளுக்கும் வளமான எதிர்காலத்தை நல்கக் கூடிய திட்டங்களையே நாங்கள் அறிமுகம் செய்துள்ளோம். அவற்றை மக்கள் ஏற்பது திண்ணம்.

கேள்வி:– கூட்டமைப்பினர் ஆட்சிக்கு வந்தால். தோட்டபுற மக்களை கொழும்பில் இருந்து விரட்டுவார்கள் என்றே எதிர்க்கட்சியில் கூறுகின்றனர். முச்சக்கர வண்டி தரிப்பிடங்களை முற்றாக அகற்றப்படும். பத்திரிகை விற்கும் கடைகளை அகற்றப்படும். அபிவிருத்தி லொத்தர் விற்கும் கடைகளை அகற்றப்படும் என்பது போன்ற குற்றச்சாட்டுகள் உள்ளன. இது பற்றி?

பதில்:– அரசு இவ்வாறான விடயங்களை செய்யாது. நாங்கள் மக்களை பொய் சொல்லி ஏமாற்ற வேண்டிய அவசியம் இல்லை. கொழும்பிலுள்ள ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவோமே தவிர அவர்களது தொழில்களை இல்லாமல் செய்யும் எதுவித நடவடிக்கையையும் நாங்கள் முன்னெடுக்க மாட்டோம்.

ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் மிகவும் தெளிவாக கூறியுள்ளனர். கொழும்பு நகரத்துக்குள் 9 வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன 17,500 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவர்களை விரட்டுவோமெனில் எதற்காக இவ்வாறான வீடுகளை ஏன் நாங்கள் அமைக்கின்றோம்.

கேள்வி:– கொழும்பு நகர சபையானது எதிர்க்கட்சியினரின் கைகளுக்கு சென்றால் அபிவிருத்தி வேலைகள் இடைநடுவில் கைவிடப்படுமா?

பதில்:– நகரசபையினது ஆட்சியதிகாரங்கள் எதிர்க்கட்சி வசமாகாது என்பதை முதலில் சொல்ல வேண்டும். வெற்றி கொள்வது நாங்களே.

அவ்வரலாற்று முக்கியத்துவமிக்க வெற்றியை நாங்கள் ஜனாதிபதி அவர்களுக்கு கண்டிப்பாக பெற்றுக் கொடுப்போம். 2/3 பெரும்பான்மை அதிகாரம் மிக்க பாராளுமன்றத்தின் ஆட்சியை பிடித்துள்ள எங்களுடன் எதிர்க்கட்சிக்கு முகங்கொடுத்து மோதி நகரசபையை வெல்ல இயலுமா?

கேள்வி:– கொழும்பில் வசிக்கும் இளைய தலைமுறை தொடர்பாக உங்களது கொள்கை விளக்கமானது யாது?

பதில்:– எனது ''புரசவிய'' அபிவிருத்தி திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சியை பெற்றுக் கொடுப்பேன்.

சுற்றுலாத் துறையிலே வெற்றிடங்கள் நிறைய இருப்பதால் நான் இந்நாட்டு உயர்ந்த சுற்றுலாத்துறை தொடர்பான நிறுவனங்களுடன் பேசியுள்ளேன். எதிர்க்கட்சியினருக்கு தேர்தல் மேடையிலே வீண் ஜம்பம் அடிக்க மட்டுமே இயலும்.

கேள்வி:– முன்னரைப் போலவே இம்முறையும் காட்சிப் பதாகைகள் எதுவுமே இல்லையே. இது இம்மாதிரியான கடுஞ்சமரிலே உங்களுக்கு நஷ்டத்தை தோற்றுவிக்காதா?

பதில்:– நஷ்டம் ஏற்படினும் கொழும்பை அழகுபடுத்த நான் வாக்குறுதி அளித்துள்ளேன். அதுபோதும்.

கேள்வி:– நீங்கள் ஒரு அமைச்சராக பாராளுமன்ற உறுப்பினராக பத்து வருடங்களாக கொழும்பு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தினாலும் அவர்களுக்கு ஒரு மலசலகூடத்தை கூட கட்டிக்கொடுக்கவில்லையே என எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்துகின்றனரே?

பதில்:– நான் மலசலகூடம் தொடர்பிலே புள்ளிவிபரவியல் அறிக்கை தரப்போவதில்லை. கொழும்பு மாநகரிலே கிராம சேவகரிடம் கேட்டால் அவற்றைப் பற்றி தெளிவாக புரியும். மலசலகூடம், மைதானங்கள், சிறுவர் பூங்கா மட்டுமல்ல கிராம சேவர்களுக்கு காரியாலயங்களை அமைத்து கொடுத்ததும் நானே.

கேள்வி:– கொழும்பு மாநகர சபை மேயர் பதவியென்பது கபினட் அமைச்சர் பதவியை விட மேலானதும் அதிகாரம் மிக்கதுமாகும். இதுவரையும் இவ்வதிகார பதவியை வகித்தோர் ஏராளம். அவர்களை பின்பற்றி அரசியலுக்கு புதிய கலாசாரத்தை அறிமுகம் செய்வேன் எனக் கூறுகிறீர்களே அதனால் தாங்கள் எவ்வாறு அதனை அர்த்தமுடைய தாக்குவீர்கள்?

பதில்:– நான் அமைச்சர் பதவிகளை வகித்தவன். அரசியலென்பது எனக்கு தொழிலல்ல. அரசியலில் சுகங்களை துய்ப்பவன் நான் அல்ல.

நகரத்திலேயே ஏழை, பணக்காரர் என்ற பேதமில்லாத ஒரு அரசியல் கலாசாரத்தை அறிமுகம் செய்ய வேண்டும். சமாதானம், நல்வாழ்வு, சகோதரத்துவம் என்பவற்றின் அடிப்படையில் நாங்கள் செயற்படுவோம். நாங்கள் இவ்வாறான பதவிகளை வகிப்பது மக்களின் குறைகளை தீர்ப்பதற்கேயாகும். அதனால் நல்லதொரு முறைமையை அறிமுகம் செய்திருப்பது கூட்டமைப்பே ஆகும். அந்நடவடிக்கைகளுக்கு மக்களிடம் இருந்து நல்ல வரவேற்பு கிடைக்கிறது. அதுவே எமது வெற்றிக்கு நல்லதொரு சாட்சியம்.